1972 மார்ச் 17]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுக்காலமாகவே அந்த மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிப் பிரச்னையில் காலதாமதம் ஏற்பட்டுவருகிறது. அந்தப் பகுதிகளிலே உள்ள காண்டிராக்டர் களிடத்திலேயே இதுபோன்ற வேலைகளை ஒப்படைத்தால் அவர்கள் விரைவிலே முடித்துவிடுவார்கள். ஆகவே அந்த அந்த டிவிஷனில் உள்ளவர்களிடமே வேலை களைக் கொடுத்து மிக விரைவிலே முடிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கலெக்டர் அவர்கள் ஒப்பந்தக் காரரிடத்திலே விரைவிலே முடிக்கவேண்டுமென்று கொடுத்தார்கள். ஆனல் அந்த ஒப்பந்தக்காரர் பாதி வேலையை செய்துவிட்டு பாதியை முடிக்காமல் விட்டுவிட்டார். பல்வேறு தாக்கீதுகள் விட்டு பிறகு அவருடைய ஒப்பந்தம் ரத்துசெய்யப்பட்டது. இப்பொழுது வேறு ஒப்பந்தக்காரரிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே முடிக்கப்படும்.

Shanmugar Mills at Rajapalayam.

* 540 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Rajapalayam citizens demonstrated on 28—8—1971 demanding re-opening of Shanmugar Mills; and

(*b*) the steps taken for re-opening the said mills?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்த ஆலையின் தொழிலாளர்கள் இந்த ஆலையை திறக்கும்படி அரசை வேண்டிக் கொண்டனர்.

(இ) இந்த ஆலை 1—11—1971 முதல் வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த இராஜபாளையம் சண்முகர் நூற்பாலை திறந்து ஓடுவது மகிழ்ச்சிகரமான விஷயம். இருந்தபோதிலும் திறக்கின்ற நேரத்திலே ஒப்புக்கொள்ளப்பட்டபடி இல்லாமல் இன்னும் ஐந்து ஆட்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. மேலும் 8 மணி வேலைக்குப் பதிலாக 9 மணி நேரம் வேலை வாங்குகிருர்கள். பெண்களையும் அதிகாலையிலே வேலைக்கு வரச் சொல்லி வற்புறுத்துகிருர்கள் என்ற தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர் களிடத்திலே தனியாகக் கேள்வி போடவேண்டும்.